கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை, இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1974.)

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு @ (பேரவைச் சட்ட முன்வடிவு எண் 7/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

1883-ஆம் ஆண்டு நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டத்தின்கீழ் அல்லது 1884-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் சம்பந்தமாக, கடன்கள் வழங்கும் ஆணைகளின் நகல்கள் அல்லது இயங்காச் சொத்துக்களைக் கொதுவை வைப்பது குறித்து பத்திரங்களின் நகல்கள், 1908-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-வது பிரிவின் (1), (3) உட்பிரிவுகளின் கீழ், சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அதிகாரியின் 1-ம் எண் புத்தகத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. நகல்கள் வரப்பெற்றதும், 1908-ஆம் ஆண்டு 16-வது மத்தியச் சட்டத்தின் 54, 55-வது பிரிவுகளின்படி குறியீடுகளில் பதிவுகள் செய்யப்படுகின்றன. நில மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் கொடுத்துத் தீர்க்கப்பட்ட தகவல்கள் பத்திரப் பதிவுத் துறையில் பெறப்படுவதில்லை. எனவே, 1908-ஆம் ஆண்டு 16-ஆவது மத்தியச் சட்டத்தின் 54, 55-ஆவது பிரிவுகளின்படி வைத்து வரப்படும் குறியீடுகளில் அந்தத் தகவல்கள் இடம் பெறுவதில்லை. இதன் விளைவாக, பத்திரப் பதிவு அதிகாரிகள் அளிக்கும் வில்லங்கச் சான்றுகளிலும் இவை இடம் பெறுவதில்லை. மேற்சொன்ன 1-ஆம் எண் புத்தகத்தில், கடன் தீர்க்கப்பட்டது பற்றிய தகவல் தாக்கல் செய்யப்படுவதற்கு 1908-ஆம் ஆண்டு பத்திரப்பதிவுச் சட்டத்தில் குறிப்பாக விதித்துறை எதுவுமில்லை என்பதுதான் இதற்குக் காரணமாகும். கடன் தீர்க்கப்பட்டது குறித்து பதிவு, 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 54, 55-ஆவது பிரிவுகளின்படி வைத்து வரப்படும் குறியீடுகளில்

@ 41-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்யப்படுமானல், வில்லங்கச் சான்றுகள் பெறும்போது, கடன் தீர்க்கப் பட்டது குறித்து மனுதார்கள் தெரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, மேலே சொல்லிய கடன் வசூலிக்கும் பொறுப்புடைய அதிகாரி கடன் தீர்க்கப்பட்ட தகவல் அடங்கிய நகலைப் பத்திரப் பதிவு அதிகாரிக்கு அனுப்பி வைக்க இயலும் வகையில், 1908-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் 89-ஆவது பிரிவில் புதிதாக (6)-வது உட்பிரிவைச் சேர்த்துக்கொள்ளக் கருதப் படுகிறது. அதன் பின்னர் பதிவு அதிகாரி கடன் தீர்க்கப்பட்ட தகவலைத் தனது 1-ஆம் எண் புத்தகத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

இதனை இம்மேலவை உறுப்பினர்கள் ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 7/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* **திரு. எஸ். டி. ஆதித்தன்:** தலைவரவர்களே, இந்தப் பத்திரப் பதிவு சம்பந்தப்பட்டமட்டில், உலகத்திலே ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாக இருந்து கொண்டிருக்கிறது. இங்கிலாந்து நாட்டில் பெரும்பாலும் சொலிசிடர் கையில் இருக்கிறது. நான் மலாய் நாட்டில் பல மாதங்கள் குடியிருந்தபோது அதை நான் கவனித்தேன். அந்த இடத்திலே பத்திரங்கள் பதிவு சம்பந்தமாக சில நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. உதாரணமாக ஒரு கடன் பத்திரம் முடிந்து விட்டதானல், நம்முடைய நாட்டிலே அதற்கு ரசீது வாங்குவதோ அல்லது ரிஜிஸ்தர் செய்துகொள்வதோ வழக்கமாக இருக்கிறது. அங்கே அந்தப் பத்திரத்திலேயே வால் சேர்த்து எழுதுகிறார்கள். நம்முடைய நாட்டிலே கூட நான் 40, 50 வருடங்களுக்கு முந்தைய பத்திரங்களைப் பார்த்திருக்கிறேன். ஒரு அடமானப் பத்திரம் அல்லது ஒத்திப்பத்திரம்—ஒத்திப் பத்திரத்தை சில இடத்தில் போக்கியப் பத்திரம் என்று சொல்கிறார்கள்—தீர்ந்து போனல், அதற்கு வால் சேர்த்து, அந்த வாலிலேயே அந்தப் பத்திரம் தீர்ந்து போய் விட்டது என்று எழுதி அப்படியே ரிஜிஸ்தர் செய்துவிடுகிறார்கள்.

அது மாத்திரமல்ல. இன்னொரு விஷயம் மலாய் நாட்டில் ரிஜிஸ்தர் ஆபீசிலேயே முடிவாகிறது. ஒரு நிலம் இருக்கிறதென்றால், அந்த நிலத்தின் மேல் பாகத்தை ஒருவருக்குக் கிரயம் செய்வதானல், அப்படிக் கிரயம் செய்கிற போது, கீழ் பாக பாத்தியஸ்தனுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நோட்டீஸ் கொடுப்பது மட்டுமல்ல, பிளான் சகிதம் தாக்கல் செய்ய வேண்டும்.

அந்த நோட்டீஸ் போனவுடன், கீழ் பாகத்தின் சொந்தக்காரன் எவனோ, போட்டிருக்கிறார்கள் என்று ஆட்சேபணை செய்து அந்த இடத்திலேயே முடிந்துவிடக் கூடியதாக இருக்கிறது. அந்த நிலையில் கூடுமான வரையில் அவர்களிடத்தில் கோர்ட்டுக்குப் போய் பின்னால் தாவா செய்கிற பழக்கம் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது.

இப்போது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவிலும் கூட, அதே விதமாக தாவாக்கள் செய்து பின்னால் வக்கீல்களிடம் போய் நிற்க வேண்டிய அவசியம் ஒருவாறு குறைக்கப்படுகிறது என்ற நிலையில், இது மிகவும் வரவேற்கத் தக்க ஒரு சீர்திருத்தமாகும். அது மாத்திரமல்ல, நான் முன்னே சொன்னதுபோல, ரிஜிஸ்தர் ஆபிசிலேயே எல்லாக் காரியங்களும் முடிந்துவிடக் கூடியதாக இந்த ரிஜிஸ்டிரேஷன் சட்டத்தை இன்னும் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், இப்போது வந்திருக்கின்ற இந்தத் திருத்தம் யாவருமே ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று என்று கூறி, இதை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, ஒரு விவசாயி ஒருமுறை அரசாங்கக் கடன் பெற்றிருந்தால், அந்தக் கடனைத் தீர்த்துவிட்டு, இரண்டாண்டுகளுக்குப் பின்னால் வேறு யாரிடமாவது தன்னுடைய சொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்க வேண்டுமென்றால், வில்லங்க சர்டிபிகேட் கேட்கிறார்கள். சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசில் வில்லங்க சர்டிபிகேட் கேட்டால், அதில் ஏற்கெனவே அரசாங்கக் கடன் வாங்கியிருக்கிற வில்லங்கம் வந்திருக்கிறது. ஆனால் அரசாங்கக் கடனை விவசாயி தீர்த்து 2, 3 வருடமாகியிருப்பினும் தீர்த்த விவரம் அந்த வில்லங்க சர்டிபிகேட்டில் வருவதில்லை. ஆகவே இந்தச் சொத்தை வேறு எங்கேயாவது அடமானம் வைத்துப் பணம் வாங்க வேண்டுமென்றால், அவர்கள் கடன் தீர்ந்ததற்கு அரசாங்கத்திடமிருந்து அத்தாட்சி வாங்கி வரச் சொல்கிறார்கள். இதனால் விவசாயி படுகின்ற கஷ்டம் சொல்ல முடியாது. இந்த மசோதா அந்தக் கஷ்டத்தைப் போக்க வந்திருக்கிற மசோதா. அரசாங்கக் கடன் தீர்ந்தால், தீர்ந்தவுடன் சம்பந்தப்பட்ட ஆபீசர் சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் கடன் தீர்ந்துவிட்டது என்று எழுதி வைக்க வேண்டுமென்று சட்டபூர்வமாக ஆணையிடுவதற்கான மசோதா இது. இந்தச் சட்டம் திருத்தப்படுவது நல்ல காரியம்; விவசாயிகளுக்கு உதவியைச் செய்யக்கூடிய காரியம். ஆகவே, இதற்கு எந்த விதமான எதிர்ப்பும் எங்கள் தரப்பிலிருந்து இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவினை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு இங்கே நல்ல கருத்துக்களை எல்லாம் வழங்கிய எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும், உயர்திரு ஆதித்தன் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவினை சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே,

" 1974 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 4-40)